JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//66 /2024 |
| | : | Prosecution P.W - 13 |
| NAME | : | தனுஷ்கோடி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 08.10.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.05.2016 ம் தேதி நான் கடையம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் இருந்த போது 24.00 மணிக்கு தென்காசி அரசு மருத்துமனையில் இருந்து கிடைத்த காயத்தகவலின் பேரில் தென்காசி அரசு மருத்துமனைக்கு சென்று அங்கு தாக்குதல் சம்பவத்தில் காயம் பட்டு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த கீழக்கடையம் ஆழிபூதத்தான் கோவில் தெருவைச்சேர்ந்த கணபதி மகன் முத்துராமன் என்பவர் பேச இயலாத நிலையில் சிகிச்சையில் இருந்ததால் அதே சம்பத்தில் காயம்பட்ட உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த கீழக்கடையம் ஆழிபூதத்தான் கோவில் தெருவைச்சேர்ந்த சந்திரசேகர் மகன் விமல் வயது 28/16 என்பரிடம் நடந்த சம்பவம் பற்றி கேட்டு அவர் அளித்த புகார் வாக்குமூலத்தை 18.05.2016 ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு பதிவு செய்து பின்பி

நிலையத்திற்கு அதிகாலை 2.30 மணிக்கு வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 124/2016 இந்திய தண்டனை சட்டம் இதசபிரிவுகள் 294(b), 324, 506(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் வாக்மூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அம்பாசமுத்திரத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகவலறிக்கை அ.சா. ஆ 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு யார் மூலம் தகவல் கிடைத்தது என்றால் தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து போன் மூலம் கிடைத்தது. முதல் தகவல் அறிக்கையில் காலம் 12ல் மூன்றாவது வரியில், "தென்காசி அரசு மருத்துமனையில் கீழ்கடையம் சந்திரசேகர் மகன் விமல் என்பவர் உள் நோயாளியாக சிகிச்சையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கிடைத்த தகவலின் பேரில் தென்காசி மருத்துமனைக்கு சென்று " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் தென்காசி அரசு மருத்துமனையில் இருந்து போன் மூலம் கிடைத்த தகவல் என்று குறிப்பிடபடவில்லை என்றாலும் அப்படி விலாவாரியாக குறிப்பிடபடவில்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் 3னில் தகவல் கிடைத்த நேரம் 18.05.2016ம் தேதி அதிகாலை 2.30 மணி என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இரண்டு பேர் சிகிச்சையில் இருக்கிறார்கள் என்று புகார் வாக்குமூலம் பெறுவதற்கு செல்லவேண்டும் என்று உயர் அதிகாரிகளின் உத்தரவோ ஆலோசனையோ பெறவில்லை என்றால் சரியல்ல உத்தரவின் படிதான் சென்றேன். மேற்படி முத்துராமன் பேச இயலாத நிலையில் இருந்தார் என்பதை யாரிடம் விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் அவர் பேசமுடியாமல் இருந்தார். அவரைப் பார்த்து தெரிந்துகொண்டேன். மேற்படி முத்துராமன் பேச முடியாமல் இருந்தார் என்ற விவரத்தை நான் விசாரணை அதிகாரி வாக்குமூலத்தில் சொன்னேன் என்றால் சரிதான். விசாரணை அதிகாரியிடம் தெரிவித்தேன். நான் சொன்ன நாள் நேரத்தில் நான் சொன்னது போல் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றாலும் காயம்பட்டவர்களை விசாரித்து நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும் நான் சொன்ன நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் மேற்படி முத்துராமன் காவல் துறையில் பணிபுரிந்தவர் என்பதால் பொய்யாக இந்த வழக்கு பதிவு

செய்துவிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2,3,4 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சொன்ன நாள் நேரத்தில் மேற்படி விமல் என்பவரிடம் எந்த புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விமல் என்பவரிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் மற்றும் பெற்றுக்கொண்டு பின்பு காவல் நிலையத்தில் வைத்து பின் யோசனை செய்து புகார் வாக்குமூலமும் முதல் தகவல் அறிக்கையும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய்யாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//66 /2024

: Prosecution P.W - 12

NAME : முகமது இம்ரான் உசைன்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 08.10.2024

முதல் விசாரணை

நான் தற்போது கடையநல்லூர் கிருஷ்ணாபுரம் அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் தென்காசி அரசு மாவட்ட மருத்துவமனையில் கடந்த 17.05.2016 ம் தேதி பணியில்இருந்த போது இரவு 11.45 மணியளவில் கடையத்தை சேர்ந்த சந்திரசேகர் மகன் விமல் வயது 27 என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி விமல் கூறியதாவது தன்னை அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் அன்றைய தினம் இரவு10.30 மணியளவில் தனது வீட்டின் அருகே வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறினார். அவருக்கு காணப்பட்ட காயங்கள் 1) 5x1x1 Cm அளவில் வெட்டுக்காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது. 2) 3x1x1 Cm அளவில் வெட்டுக்காயம் Right side forehead ல் காணப்பட்டது. 3) 2x1x1 Cm அளவில் வெட்டுக்காயம் left cheek ல் காணப்பட்டது. 4) 5x1x1 Cm அளவில் சிதைந்த காயம் Fronto Parietal Region ல் காணப்பட்டது. 5) 4x1x1 Cm அளவில் பின் தலையில் சிதைந்த காயம் காணப்பட்டது . அவரை உள் நோயாளியாக அனுமதித்தேன் தலைப்பகுதிக்கு நுண் கதிர் படம் எடுக்கப்பட்டதில் எந்த

எலும்பு சேதாரமும் இல்லை. எனவே மேற்படி காயங்கள் சாதராண காயம் என்று சான்று வாழங்கினேன். விமல் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அன்றை தினம் இரவு 11.40 மணியளவில் கடையத்தை சேர்ந்த திரு கணபதியின் மகன் முத்துராமன் வயது 60 என்பவரை அவரது மகன் திரு.கண்ணன் சிகிச்சைக்கு அழைத்துவந்தார். மேற்படி முத்துராமன் கூறியதாவது தன்னை அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் அன்றையதினம் இரவு 10.30 மணியளவில் தனது வீட்டின் அருகே வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறினார். அவருக்கு பின் வரும் காயங்கள் காணப்பட்டது. 1) 2x1x1 Cm அளவில் இடது காதின் கீழ்பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டது. 2) 6x1x1 Cm அளவில் பின் தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது. 3) 6x1x1 Cm அளவில் பின் தலையில் கீழ் பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டது அவரை உள் நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு நுண் கதிர் படம் எடுக்கப்பட்டதில் எலும்பு சேதாரம் எதுவும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதராண காயங்கள் என்று சான்று வழங்கினேன். முத்துராமன் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விமலுக்கு ஏற்பட்ட காயங்கள் கூர்மையான கத்தியால் தாக்கப்படும்போது ஏற்பட வாய்ப்பு உண்டு. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி விமலும், முத்துராமனும் சிசிச்சைக்கு வரும்போது சுயநினைவுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விமலும், முத்துராமனும் சிசிச்சைக்கு வரும்போது என்னிடம் அருவாளால் மேற்படி காயங்கள் ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான். அசாஆ.7 மற்றும் அசா.ஆ 8ல் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்பதில் ஆம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விமலும், முத்துராமனும் என்னுடைய சிசிச்சைக்கு வருவதற்கு முன்பு வேறு மருத்துமனையிலேயோ அல்லது தானாகவோ முதல் உதவி சிகிச்சை பெற்றதாக அசாஆ 7, அசாஆ 8ல் துலங்காது என்றால் அவ்வாறு முதல் உதவி சிகிச்சை பெற்றதாக என்னிடம் சொல்லவில்லை. மேற்படி விமலுக்கும் முத்துராமனுக்கும் ஏற்கனவே சிகிச்சை ஏதுவும் அளிக்கப்பட்டதாக புலப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி விமலையும், முத்துராமனையும் ICU க்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி விமலுக்கும், முத்துராமனுக்கும் சிராயிப்பு காயங்களோ வீக்க காயங்களோ காணப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 7, அசாஆ 8ல் மேற்படி விமலுக்கும், முத்துராமனுக்கும் சிகிச்சைக்கு வந்தபோது இரத்தம் வந்துகொண்டிருந்ததா அல்லது இரத்தம் உறைந்து இருந்ததா என்று

துலங்காது என்றால் Bleeding பற்றி எழுதுவதில்லை. அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ல் மேற்படி விமலுக்கோ, முத்துராமனுக்கோ அவர்களின் உதட்டில் காயம் பட்டதாக இல்லை என்றால் சரிதான். மேற்படி காயங்களின் ஆழம் 1 செ.மீ என்றால் சரிதான். ஒரு அருவாள் போன்ற கூர்மையான ஆயுதங்களை வைத்து உடல் பகுதியில் அழுத்தினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்றால் அழுத்தினால் இந்த காயங்கள் வராது வெட்டினால் வரும். மேற்படி நபர்கள் முன்தட்டி விழுந்தாலோ அல்லது பின்னால் வழுக்கி விழுந்தாலோ கூரிய பொருட்கள் இருந்தால் அதன் மூலம் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி காயங்கள் ஒரு கரடு முரடாண பாதையில் நடந்து செல்லும்போது கால் தட்டி கூர்மையான கற்கள் போன்ற பொருட்களில் விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் பெரிய கல்லாக இருந்தால் வாய்ப்பு உண்டு.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi